# வீட்டுத் திருச்சபை (HOUSE CHURCH)

## அறிமுகம்

இருபத்தியொராம் நூற்றாண்டின் திராட்சரச போத்தல் (Wine Bottle) முதலாம் நூற்றாண்டின் திராட்சரச துருத்திக்கு (Wineskin) ஒப்பாக இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு சொன்னார்:

*"ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழதுருத்திகளில் வார்த்து வைக்க மாட்டான், வார்த்து வைத்தால், புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும். இரசமும் சிந்திப்போம். துருத்திகளும் கெட்டுப்போம். புதுரசத்தைப் புதுதுருத்திகளில் வார்த்து வைக்கவேண்டும் என்றார்." (மாற்கு 2:22)*

புதிய திராட்சரசமானது நொதிக்கும் பொழுது நுரைகளை வெளிவிடும். புதிய திராட்சரச துருத்தியின் தோலானது இவ்வாயுவை அல்லது நுரைகளை கையாளக் கூடிய விதமாக விரிவடையும். ஆனால் பழைய துருத்தி அப்படிச் செய்ய முடியாது. வெடித்த திராட்சரச துருத்தியானது மாத்திரம் அழிவதுமல்லாமல் அதனுள் இருக்கின்ற விலை மதிப்பற்ற உள்ளடக்கங்களும் நிலத்தில் சிந்தி அழிந்து போகும்.

புதிய திராட்சரசத்தைக் கிறிஸ்துவிலுள்ள புது வாழ்விற்கு ஒப்பிடும் போது துருத்தியானது வெளியரங்கமான ஒழுங்கமைக்கப்பட்ட எங்கள் விசுவாசத்தின் உணர்வுகளைப் தேவ ஜனங்களாகிய நாங்கள ஒன்று கூடும்போது (சபையியல்) பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கிறது. சபை ஒழுங்கைக் குறித்த கற்றலானது துருத்திகளைக்/ போத்தல்களைக் குறித்த கற்றலிற்கு ஒப்பிடக்கூடியதாக இருக்கும். ஆண்டவராகிய இயேசு திராட்சரச துருத்திகளைக் குறித்துச் சொன்ன உதாரணத்தில் சில வழிமுறைகள் எப்படி பொருத்தமற்றதோ அப்படியே சபையை நடப்பிக்கும் சில வழிமுறைகளும் பொருத்தமற்றதாக மாத்திரமல்ல கிறிஸ்துவிலுள்ள எங்கள் வாழ்க்கையாகிய புதிய திராட்சரசத்துக்கு தீங்காகவும் இருக்கலாம்.

திராட்சரசத்தை ருசி பார்ப்பவர்கள் தங்கள் திராட்சரசத்தை விசேஷித்த திராட்சரச கண்ணாடி குவளையில் (Special Wine Glass) அருந்தி மகிழ விரும்புவார்கள். இக் கண்ணாடி குவளையிலுள்ள திராட்சரசமானது வெளிச்சத்துக்கு எதிராக பிடிக்கப்பட்டு சுழற்றப்பட்டு பரீட்சிக்கப்பட்டு முகர்ந்து பார்க்கப்பட்டு இறுதியாக சுவைத்துப் பார்க்கப்படும். திராட்சரசத்தை ருசி பார்ப்பவர்கள் பழ ரசத்தை தற்காலிக தங்குமிட விடுதிகளில் (Motel) காணப்படும் மலிவான பிளாஸ்டிக் குவளைகளில ஏன் ஊற்றுவதில்லை? திராட்சரசத்தை ஒன்றும் மாற்றுவதில்லை. இருப்பினும் அவர்களுடைய அனுபவித்து ருசித்துக் குடிக்கும் தன்மை அற்றுப்போய்விடுகிறது. கொள்கலன் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. அதே போன்று சூழ்நிலைகளால் பாதிக்கப்படாத ஒரு காற்றில் மிதக்கும் ஆவியுரு போன்று நாம் இருப்பின் எங்கே எப்படி தேவனுடைய ஜனங்களாக நாங்கள் கூடுகிறோம் என்ற காரியங்கள் பெரிதாக தோன்றாது. நாங்கள் காற்றில் மிதக்கும் ஆவியுரு போல் இல்லாதபடியினால் அப்படிப்பட்ட காரியங்கள் கிறிஸ்துவுக்குள் எங்களுடைய வாழ்க்கையையும் கிறிஸ்துவுடன் எங்களுக்குள்ள தனிப்பட்ட உறவையும் பாதிப்படையச் செய்கிறது.

அந்த வகையில் திராட்சரசமும் திராட்சரச துருத்தியும், அதே போன்று பிரமாணமும் (Principle) மாதிரியும் (Pattern) முக்கியமானவை. எந்தவித விவாதத்திற்கும் இடமில்லாதபடிக்கு திராட்சரச துருத்தியானது திராட்சரசத்துக்காகவே இருக்கின்றது. ஒழுங்கான துருத்தி இல்லாவிட்டால் திராட்சரசம் நிலத்தில் சிந்தி வீணாகிப் போய் விடும். ஒன்றில்லாமல் ஒன்று இருக்க முடியுமென்பது தவறான பிரிவுபடுத்ததும் சிந்தனையாகும். இரண்டிற்குமே கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

குப்பைத் தொட்டிகளில் உடனடியாக தாரளமாக கிடைக்கக்கூடியது வெறும் போத்தல்களாகும் - மிக நல்ல நிலையிலுள்ள போத்தல்கள் கூட. ஆனாலும் அவைகள் ஏன் எறியப்பட்டன என்பதற்கான காரணம் இரகசியமான ஒன்றல்ல. போத்தலிலுள்ள திரவம் போனபிற்பாடு போத்தல் பிரயோசனம் அற்றதாக எண்ணப்படுகிறது. போத்தல்களுக்குள் என்னவெல்லாம் இருக்கின்றனவோ அதற்காகவே போத்தல்கள் இருக்கின்றன என்பது தெளிவானது. இருப்பினும் எறியப்பட்ட போத்தல்களும் ஒருமுறையாவது மிக முக்கியமான ஒரு நோக்கத்தை நிறைவேற்றியிருந்தது. அதாவது அதனுள் உள்ளடக்கியிருக்கும் திரவத்தை யார் இறுதியில் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு பாதுகாப்பான முறையில் அதைக் கொடுப்பதாகும்.

இப் புத்தகமானது அந்த வகையில் திராட்சரச துருத்தியைப் பற்றி பேசுகின்றது. உண்மையிலேயே எது முக்கியமென்றால் திராட்சரசமே ஒழிய துருத்தியல்ல. ஏற்கனவே புதிய திராட்சரசம் உள்ளவர்களுக்காகத்தான் நாம் இதை எழுதுகிறோம். இயேசுவுக்குள் ஜீவனுள்ள புதிய திராட்சரசத்தைக் கொண்டிராதவர்கள் சபை நடைமுறைகளைக் குறித்த அவர்களுடைய உபதேசங்களை குப்பைக் கூடைக்குள் வீசலாம். இருப்பினும் ஒரு சபையானது கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை அல்லது வாழ்க்கையை உண்மையாகவே கொண்டிருப்பின் திராட்சரச துருத்தியைக்குறித்த இந்த விபரமான போதனையானது திராட்சரசத்தை அதன் முழுமையான பயனோடு அனுபவித்துக் குடிப்பதை உறுதி செய்வதற்கு அவசியமாக இருக்கின்றது. உதாரணமாக குளிர் பானத்தை தயாரிப்பவர் அந்த பானத்தை ஒரு பிளாஸ்டிக் கோப்பையிலிட்டு மூடாதவாறு பொதியிலிட்டு கப்பலில் அனுப்புவதாக எண்ணிக்கொள்வோம். அப்பானமானது பாவனையாளரை ஒரு போதும் சென்றடையாது. நீங்கள் உங்களது காலைக் கோப்பியை கடதாசிக் குவளையில் அருந்த முயற்சிப்பதாக வைத்துக்கொள்வோம். உடனடியாக பானம் கடதாசிக் குவளையிலிருந்து ஒழுக ஆரம்பிக்கும். நீங்கள் உங்கள் கோப்பியை சேதப்படுத்துவது மாத்திரமல்ல கடதாசிக் குவளையையும் (ஏன் உங்கள் உடையையும்) சேதப்படுத்தி விடுவீர்கள்!! ஓவ்வொரு தேவைக்காகவும் பொருத்தமான பாத்திரம் தெரிந்தெடுக்கப்படுவதற்கு கொள்கலனைக் குறித்த துல்லியமான போதனை அவசியமாக இருக்கின்றது. பொருத்தமான பாத்திரம் இல்லாவிட்டால் பாவனையாளர் அனுபவித்துக் குடிப்பதற்கு ஒன்றுமே இருக்காது.

புதிய உடன்படிக்கையின் திராட்சரசத்திற்குரிய மிகப் பொருத்தமான கொள்கலனானது ஆதித் திருச்சபையின் நடவடிக்கையில் காணப்பட்டுள்ளது என்று நாங்கள் நம்புவதற்கு உந்தப்படுகின்றோம். எப்படி மிகத்திறமையாக திருச்சபைகளை உருவாக்குவதும் ஒழுங்குபடுத்துவதும் என்று ஆரம்ப அப்போஸ்தலர்களை விட யாருக்கு அதிகமாக தெரிந்திருக்க முடியும்? நாங்கள் அறிமுகப்படுத்தும் பாரம்பரியமானது பிரத்தியேகமான முறையில் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் காணபபடும் அப்போஸ்தலர்களின் பாரம்பரியமாகவே

இருக்கின்றது. இன்றைய சபையானது அப்பாரம்பரியங்களோடு மேலதிகமாக சேர்ப்பதுமட்டுமல்லாமல் அதிகமான வேளையில் அதற்கு நேர் எதிராக செயற்படுவதாக இருக்கின்றது. எங்களுடைய கருத்தின்படி இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு சிறிய விடுதியிலுள்ள (motel room) பிளாஸ்டிக் குவளையிலேயே திராட்சரசத்தைக்குடிப்பது போன்று இருக்கின்றது.

''கண்டுபிடிப்பாளர்களின் போராட்டம்'' (The Innovator's Dilemma) என்ற புத்தகத்தில் ஹாவார்ட் நிபுணரும் வர்த்தக வல்லுனருமான ''கிறிஸ்கொன்சால்வ்ஸ்'' (Chrisgonsalves) என்பவர் வெற்றிகரமான புதிய உற்பத்திகள் பாவனையாளர்கள் மதிக்கின்ற விரும்புகின்ற குணாதிசயங்களை வழங்குகின்றது. ஏனென்றால் சாதரணமாக அவைகள் மலிவாகவும் எளிமையாகவும் சிறியதாகவும் கைக்கு அடக்கமாகவும் பாவிப்பதற்கு வசதியாகவும் இருக்கின்றது. வீட்டில் கூடி வரும் சிறு சபைகள் செலவு குறைந்ததாகவும் எளிமையாகவும் சிறியதாகவும் புரட்சிகரமானதாகவும் இருக்கின்றன. ''கொன்சால்வ்ஸின்'' வார்த்தைகளில் சொல்லப் போவோமானால் அச்சபைகள் தற்போது இருக்கின்ற சபை நிலமையை குழப்பமடையச் செய்வதாக இருக்கின்றன. வீட்டில் கூடி வரும் சபைகள் பாதாளத்தின் வாசல்களை குழப்புகின்ற அல்லது கெடுக்கின்ற தந்திரோபாயங்களை கொண்டதாக இருக்கலாம். சபையில் உறங்கிக்கொண்டிருக்கும் ஒரு பகுதியினருக்கு வீட்டு சபைகள் தந்திரோபாயமான ஒரு அதிர்ச்சியினைக் கொடுக்கின்ற ஒரு சக்தியாக இருக்கலாம். அநேகமான சபைகளால் புறக்கணிக்கப்பட்ட சபை நடைமுறைகளில் சில பகுதிகளை தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தின்படி எங்களிற்கு தெளிவுபடுத்திக் காண்பித்துள்ளார். ஆதி அப்போஸ்தலர் முறைமைக்குத் திரும்புவது கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைக்கு அளப்பரிய ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்று நாங்கள் நம்புகின்றோம். இந்தப்புத்தகத்தை எழுதுவதில் பங்கு பற்றிய அனைவரும் இவ்வாசீர்வாதங்களை பலவருடங்களாக அனுபவிப்பது மட்டுமல்லாமல் இவ்விருந்தை நம்முடனே கூட கிறிஸ்து இயேசுவுக்குரிய அனைவரும அனுபவிக்க வேண்டுமென்று மிக அதிகமாக விரும்புகின்றோம்.

மிக முக்கியமாக வீட்டுச் சபைகள் வேதாகமத்திற்குரியவைகளாக காணப்படுகின்றன. பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்களால் உறுதியாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு சபையின் நடைமுறை என்ற துருத்தியினுள் பழைமை வாய்ந்த உன்னத வரலாற்றுக் கிறிஸ்தவம் ஊற்றப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்கிறோம். அப்போஸ்தலர்களினுடைய பாரம்பரியம் வெறுமனே வீடுகளில் கூடுகின்றதை விட மிக அதிகமான காரியங்களை உள்ளடக்குகின்றது. பல கோணங்களைக் கொண்ட வைரத்தின் ஒரு கோணமே வீட்டு சபைகள் ஆகும். நம்முடைய சபை வாழ்க்கையைப் பொறுத்தவரையில் நம்முடைய இலக்கானது ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்துவைக் கனம்பண்ணுவதாகவும் முழுக்க முழுக்க வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கின்றது. தொடர்ந்து வரும் பக்கங்களில் பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஒரு வீட்டின் வரவேற்பு அறையின் அளவையுடையதாக இருக்கும் சபைகள் , அத்துடன் கர்த்தருடைய பந்தியை முழு உணவாக ஆசரித்தல் , சபைத் தலைவர்கள் சேவகர்களாக இருத்தல் (பிரபுக்களாக அல்ல), சபையின் ஆளுகை கூட்டாக முடிவெடுக்கும் தன்மையுடையதாக இருத்தல் , முடிவுகளை கூட்டாக எடுக்கின்ற சகோதரர்களுக்கிருக்கின்ற பொறுப்பும்ம உரிமையும், பாதிரியார்-சாதாரணமானவர்

என்ற வித்தியாசமில்லாமை, விஷேசித்த போதிக்கும் நேரங்களின் முக்கியத்துவம், எல்லோரும் (விசுவாசிகள்) பங்குபற்றும் சபைக்கூட்டங்கன் போன்றவற்றிற்காகவும் நாங்கள் விவாதிக்கின்றோம். மேற்சொன்னவற்றிலிருந்து வீடுகளில் கூடிவரும் அன்னியோன்னியமாக இருக்கும் குடும்பப்பாங்கான சபையை நாம் பரிந்துரைக்கும் போது ஒழுங்கும், ஒழுங்கமைப்பும் (order and organization) முக்கியமற்றது என்று கருதிவிடமுடியாதபடிக்கு நாங்கள் அவதானமாக இருக்கின்றோம்.இதை கவனத்தில் எடுத்துக் கொள்ளும்படியாக உலகமெங்கும் பரந்திருக்கும் சபைக்கு நாங்கள் பணிவன்போடு இப்புத்தகத்தை முன்வைக்கின்றோம். பல வருடங்களாக கற்றுக் கொண்டதனிமித்தமும் அனுதின நடைமுறை அனுபவங்களி னிமித்தமும் உண்டான விளைவே இப்புத்தகமாகும். சபையைக்குறித்த இம்முழுப்படிப்பானது கிறிஸ்து விரும்புகின்ற அவரின் சரீரத்தின் ஜனங்களாக ஒரு உயர்வான நிலையில் நம்மை வைக்கின்ற ஒரு படிக்கல்லாக இருக்கின்றது. கர்த்தர்தாமே தம்முடைய எல்லா ஜனங்களுக்கு தம்மையும் தம்முடைய மணவாட்டியைக் குறித்த ஆழமான அறிவை வழங்குவதற்கும் , அவருக்கு சேவை செய்வதில் மிகுந்த பெறுபேற்றை உடையவர்களாக நாங்கள் இருப்பதற்கும் அருள் செய்ய பிரியமுள்ளவராக இருப்பாராக.

ஸ்ரீவ் ஈ. அற்கெர்ஸன்
மார்ச் 2008
அட்லன்ரா
ஐக்கிய அமெரிக்க நாடுகள்